இயல் 5 வாழ்விக்கும் கல்வி

1.கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

- உலகில் எல்லாச் செல்வங்களும் அழிந்துவிடும்.
- இருபது இருபத்தைந்தாண்டுக்கு முன் இங்கு இருந்த ஆலமரம் எங்கே என்றால் புயலில் விழுந்துவிட்டது என்போம்.
- இங்கிருந்த பெரிய கட்டடம் எங்கே? என்றால், மழையால் இடிந்து விட்டது என்போம்.
- 10ஆண்டுக்கு முன் 2 இலட்சம் ரூபாய் வைத்திருந்தவர் இன்று இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார் என்போம்.
- எல்லாம் அழியும். ஆனால் கல்வி அப்படியன்று. 10 ஆண்டுக்கு முன்னர் பட்டம் பெற்றவர் இன்று 10 ஆம் வகுப்பு ஆகிவிட்டார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் கல்வி அழியாதது. வள்ளுவரும் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்கின்றார்.

2.கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

கல்வி ஓர் ஒளிவிளக்கு. இருக்கும் இடத்தை ஒளிமயம் ஆக்கும். அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவர் கற்றுவிட்டால் அப்படிக் கற்ற கல்வியை பலருக்கும் அளிக்க வேண்டும். அப்படிப் பலருக்கும் ஒளி தருவது தான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும்.அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

3.கல்வியும் பள்ளியும் குறித்து எழுதுக.

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்" என்றார். ஏன் அப்படிச் சொன்னார் பாரதி? ஏனெனில், கல்விக்கூடங்களில் தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆக வேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆக வேண்டும். அதற்காகத்தான் கோயில்களாகிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறார்கள்.